சுருக்கம்

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–2018–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது– திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1) துறை

அரசாணை(நிலை) எண்.136

ஹேவிளம்பி – ஐப்பசி–29
திருவள்ளுவர் ஆண்டு–2048
நாள்: **15.11.2017**

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண். 57, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1)துறை, நாள் 29.05.2017.
2. அரசாணை (நிலை) எண். 102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை, நாள் 15.09.2017.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.19681/2017/NEDM-2, நாள் 27.09.2017 மற்றும் இணைப்பு.

----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–18–ஆம் ஆண்டுக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை (MLACDS) நிறைவேற்றுவதற்காக ரூ.470.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ஐ செயல்படுத்திட ஏதுவாக உரிய வழிகாட்டி நெறிமுறைகளும் உள்ளடக்கி ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.07.2017 அன்று சட்டமன்ற பேரவையில் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி ஒவ்வொரு தொகுதிக்கும் 2017–2018–ஆம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாக உயர்த்தியும், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.2.50 கோடியில் (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்), ''வரையறுக்கப்பட்ட கூறு நிதிக்கு'' **(Tied Component)** ரூ.1.50 கோடி (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மற்றும் ''வரையறுக்கப்படாத கூறு நிதிக்கு'' **(Un Tied Component)** ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒதுக்கியும் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டது. இவ்வாறு ஒப்பளிக்கப்பட்ட